23.06.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண்.164 /2020 ) திரு.கருப்பசாமி.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> –

1) ரோட்டிற்கு தென்புறம் எனது இடம் உள்ளது என்றால் சரிதான். ஓடைக்கு தென்புறம் எனது இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஓடையின் அகலம்,நீளம் எவ்வளவு என்று தெரியாது என்றால் சரிதான். அந்த ஓடையின் கரை எவ்வளவு அகலம் உள்ளது என்று தெரியாது என்றால் சரிதான் வேலிமண்டி உள்ளது ஒதுக்கிவிட்டு நடந்து செல்லலாம். வேலி மண்டிகிடப்பது வருடக்கணக்காக உள்ளது என்றாலும் நடமாட்டம் இல்லை என்பதால் வேலி மண்டிக்கிடக்கிறது என்பதால் நடபாதை இல்லை என்பதால் வேலி மண்டிக்கிடக்கிறது. தாவாச்சொத்தை கிரையம் பெற்ற பின்னர் தான் அந்த ஊரை பற்றி எனக்கு தெரியவரும் என்றால் இல்லை நான் 15, 20 வருடங்களாக அங்கு தான் இருந்து வருகிறேன். பயர் ஆபீஸ்க்கு எந்த பக்கம் பெட்ரோல் பல்க் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றால் மேற்கு பக்கம். தாவா இடத்திற்கு மேல்புறம் எனது இடம் உள்ளது கீழ்புறம் ஒரு ஆசாரி இடம் உள்ளது என்றால் சரிதான். ஆசாரி இடத்திற்கும் மேல்புறத்தில் எனது பெட்ரோல் பல்க் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த பெட்ரோல் பல்க் ஆரம்பித்து எவ்வளவு ஆண்டுஇருக்கும் என்றால் 1 ½ ஆண்டு ஆகிறது. பெட்ரோல்பல்க்குக்கு மேல்புறத்தில் துார்ந்துபோன கிணறு சுமார் 10 அடி துாரத்தில் உள்ளது என்றால் சரிதான். கிணறும் கிணர் சார்ந்த இடத்தையும் வருவாய் துறையினரால் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வருவாய்துறையினர் உட்பிரிவு செய்ததன் அடிப்படையில் தனியாக பிரித்து காண்பிக்காமல் ஒன்றாக சேர்த்து அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது இடத்தில் தெற்குகடைசி இடத்தை மேடாக ஆக்கியுள்ளேன் என்றால் இல்லை. வாதி இடத்திற்கும், எனது இடத்திற்கும் இடையே கரையை 3 அடி உயரத்திற்கு மேடாக செய்துள்ளேன் என்றால் இல்லை. அவ்வாறு மேடாக எனது இடம் எனது செய்யப்பட்டியிருந்தால் அதனை சமப்படுத்த எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் எனது இடத்தில் நான் எனது விருப்பம் போல் செய்வேன்.

2) எனது இடத்திற்கும், வாதி இடத்திற்கும் இடையே வாதியிடத்திலிருந்து மேட்டை தாண்டி தான்போக வேண்டுமென்றால் மேடு ஏற்படுத்தப்படவில்லை எனது இடத்தில பாதை இல்லை மீண்டும் சாட்சி மேடாக இருந்தால் சமப்படுத்துவதற்கு ஆட்சேபனை இல்லை என்று கூறுகிறார். வாதி இடத்திற்கு விவசாய பொருட்களை

கொண்டு செல்வதற்கு எனது இடத்தின் வழியாகத்தான் கொண்டு செல்ல வேண்டுமென்றால் இல்லை எனது இடத்தின் வழியாக பாதை இல்லை. நான் தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு 20 ஆண்டுகளாக விவசாயம் நான் தான் செய்து வருகிறேன். இந்த விவரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்குத் தான் தெரியும். பெட்ரோல் பல்க்கிற்கு பின்புறத்தில் செட் அமைத்துள்ளேன் என்றால் பல்க்கிற்கு அருகிலேயே போட்டுள்ளேன். பெட்ரோல் பல்க் மேல்புறத்தில் ஒரு கடை ரோட்டை பார்த்து அமைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கடைக்கு பின்புறத்தில் தான் தூர்ந்துபோன கிணர் வரும் என்றால் சரிதான். கிணற்றுக்கு மேல்புறத்தின் வழியாக வாதிகள் விவசாய விலை பொருட்களை கொண்டு சென்றதை மறைப்பதற்காக கடையை கட்டியுள்ளேன் என்று சொன்னால் அங்கு பாதை கிடையாது.வழக்கு நிலுவையில் இருக்கும் போது சர்வேயர், வருவாய் துறையினர் மூலமாக வாதியின்இடத்தை அளந்து பார்த்தோம் என்றால் சரிதான். அவ்வாறு அளந்து பார்த்த போது வாதிக்கு பாத்தியப்பட்டஇடம் அவரது கையிலும் எனது பாத்தியப்பட்ட இடம் எனது கையிலும் இருப்பதை உறுதி செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது இடத்திற்கு கீழ்புறம் அமைந்துள்ள ஆசாரியின் இடத்தின் வழியாக வாதியின் இடத்திற்கு செல்ல முடியாது என்றால் சரிதான். தாவா இடம் உள்பட சர்வே எண்.271/3 ல் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 97 செண்டு அமைந்துள்ளது என்றால் தெரியாது. மாரீஸ்வரி பாண்டியிடமிருந்து நான் எவ்வளவு இடம் வாங்கியுள்ளேன் என்றால் 2 ஏக்கர் 25 செண்டு இருக்கலாம் சரியாக தெரியாது. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னர் எனது கிரைய முன்பாத்தியஸ்திடம் வாதி பாதை சம்பந்தமாக கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் கிரையம் பெறுவதற்கு முன்பும், பின்னரும் வழக்கு தாக்கல் செய்த பின்னரும் வாதிக்கு பாதை இல்லை என்று கூறினார். எனக்கு கிரையம் கொடுத்த நபர் ஊரில் உள்ளார்களா என்றால் சென்னையில் உள்ளார்கள். அவர்களை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் முடியும். மாரீஸ்வரி பாண்டியன் 2 கிரைய ஆவணம்மூலம் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

3) எந்த எந்த கிரைய ஆவணத்தின் மூலம் எந்த எந்த சொத்தை கிரையம் பெற்றார் என்றுசொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. கிரையம் பெறும் போது சரியான விவரம் தெரியாமல் தான் கிரையம் பெற்றேன் என்றால் தெரிந்து தான்

கிரையம் பெற்றேன். எத்தனை சர்வே எண்ணில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் நான் படிக்கத்தெரியாதால் எத்தனை சர்வே எண் என்று எனக்கு தெரியாது. ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று எனக்கு தெரியாது எனறால் சரிதான். சர்வே எண்.271/3 எனது முன் கிரைய தாரர் மாரீஸ்வரி பாண்டியன் கிரையம் பெறுவதற்கு முன்பே 4 உட்பிரிவுகள் ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் இடத்திற்கு வடபுறம் 2 உட்பிரிவுகள் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.271/3 பி– என்ற உட்பிரிவு எவ்வாறு உள்ளது தெரியாது என்றாலும் அது ரோட்டிலிருந்து ஆரம்பிக்கிறது என்று தெரியாது என்றால் தவறு ரோட்டிலிருந்து தான் ஆரம்பிக்கிறது. எனது வழக்கை நிரூபிக்க வேண்டுமென்பதற்காக பொய்யாகவும், தவறாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரே நபரிடமிருந்து சமயத்தில் நான் கிரையம் பெற்றுள்ள சர்வே எண்.271/3 பி இடத்தை கிரையம் பெறும்போது சர்வே எண்.271/3 சி–க்கு வழி பாதை உள்ளதை மறைத்து ஆவணத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல வழிபாதை இல்லை. வாதிகள் வாங்கிய 1981, அதற்கு முன் கிரையம் 1977 பத்திரங்களிலும் வாதியின் நிலத்திற்கு செல்லக்கூடிய பாதை பற்றி எழுதப்பட்டுள்ளது என்றும் அந்த விவரம் நான் தெரிந்துகொண்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு நபருக்கு பாத்தியப்பட்ட இடத்திலும் நடுப்பகுதியிலும், ஓரத்திலும் பாதை அமைத்துக் கொள்ளலாம் என்றால் சரியல்ல. எனது வெடி தொழிற்சாலைக்கு பாதை என்பது கிடையாது என்றால் சரியல்ல பாதை உள்ளது. வெடி தொழிற் சாலைக்குள்ள ஆவணத்தை தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். வெடி தொழிற்சாலையில் கிரைய ஆவணத்தில் பாதை என்பது காட்டப்படவில்லை என்றால் நான் கிரையம் பெறுவதற்கு முன்பே முன்கிரையதாரரால் வெடிதொழிற்சாலை கட்டப்பட்டியிருந்தது அதை தான் கிரையம் பெற்றுள்ளேன்.

4) வெடி தொழிற்சாலை உள்ள இடமும், அதற்கு வடபுறம் உள்ள இடமும் வேறுவேறு சர்வே எண் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மற்றொரு சர்வே எண் நிலத்தின் வழியாக வெடி தொழிற்சாலைக்குபாதை இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. வெடி தொழிறசாலைக்கு என்றுபாதைக்கு என்று வேறு இடம் வாங்கவில்லை என்றால் எல்லாம் எனது இடம் தான். வெடி தொழிற்சாலைக்கு அனுமதி பெறுவதற்கு அருகில் உள்ள நில உரிமையாளரிடம் கையொப்பம்

பொறவேண்டும் என்றால் 20 வருடத்திற்கு முன்பு வாங்கப்பட்டுள்ளதால் எனக்கு தெரியாது. வெடி தொழிற்சாலை அனுமதியை எத்தனை வருடங்களாக ஒரு முறை புதுப்பிக்க வேண்டுமென்றால் 3 வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும். அவ்வாறு புதுப்பிக்கும் போது அருகில் உள்ள நபர்களிடம் கையொப்பம் பெற வேண்டுமென்றால் தேவையில்லை. அதனை உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வெடி தொழிற்சாலை சட்ட விரோதமான நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் நான் வெளியூர் காரன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது குடியிருப்பு அந்த பகுதியில் இல்லை. குடியிருப்பு இல்லாததால் அந்த பகுதியில் உள்ளவர்கள் எவ்வாறு பயன்படுத்தி வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். வாதிக்குள்ள பாதையை கொடுக்கக்கூடாது என்பது தான் எனது வழக்கு என்றால் சரியல்ல. வாதி கிரையப்பத்திரத்தில் பாதை சொல்லப்பட்டியிருந்தால் அதனை கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் வாதியின் பத்திரத்தில் பாதை இருக்காலம் ஆனால் எனது பத்திரத்தில் இல்லை வாதியின் பத்திரத்தில் அவர்களால் எழுதியிருக்கலாம். வாதியின் பத்திரம் பற்றி தெரியாத நிலையில் அவர்களாக எழுதியிருக்கலாம் என்று யூகத்தின் அடிப்படையில் சொல்லுகிறேன் என்றால் சரிதான். வாதியின் பத்திரத்தில் அவர்களாக எழுதியிருக்கலாம் என்று தெரிந்த பின்னர் நான் சட்டவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை.வாதியின் வழக்கு செல்லத்தக்கது என்றும் வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.06.2026.